ஒரு மொழிக்கு தாய்ப்பாலும், மற்ற மொழிகளுக்கு கள்ளிப்பாலும் புகட்டுவதா?

இந்தி திணிப்புக்கு எதிராக சட்டசபையில் ஸ்டாலின் தீர்மானம்

“இந்தி பேசாத மக்களை மூன்றாம் தர குடிமக்களாக மாற்ற முயற்சிக்கிறார்கள்”

சென்னை, அக்.18

தமிழக சட்டசபையில் இன்று இந்தி திணிப்பை எதிர்த்துதனித்தீர்மானத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்தார். அப்போது அவர் பேசும்போது, பண்பாட்டிற்கு சொந்தக்காரர்களாகியநம்மைமூன்றாம் தர குடிமக்களாக நம்மை ஆக்கிவிடப்பார்க்கும்முயற்சிகளுக்கு நாம் எதிர்க்குரல் எழுப்பிட வேண்டும் என்றார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்தித் திணிப்புக்கு எதிராக தனித் தீர்மானம்கொண்டுவந்தார். பின்னர்அவர்பேசியதாவது:

“வீழ்வதுநாமாகஇருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்” என்ற கொள்கைக்குச் சொந்தக்காரர்களாகிய நாம், அன்னைத் தமிழைக் காப்பதற்காக மட்டுமல்ல; ஆதிக்க மொழித் திணிப்புக்கு எதிராக என்றும் குரல் கொடுப்பவர்கள் என்ற அடிப்படையில், வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்தஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் முன்மொழிவதற்கு முன்பாகஒருமுன்னுரையை வழங்க விரும்புகிறேன்.

தமிழ்காக்கசிறைசென்று மரணம் அடைந்த நடராசன் தாளமுத்து தொடங்கி, தீக்குளித்த கீழப்பழூர் சின்னச்சாமி, துப்பாக்கிக் குண்டுக்குப்பலியானசிதம்பரம் ராசேந்திரன் வரையிலான தியாகிகளை இந்த நேரத்தில் நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.

மொழி என்பது, நமது உயிராய், உணர்வாய், விழியாய், நம் அனைவரின் எதிர்காலமாய் இருக்கிறது. அத்தகைய நம் தாய் மொழியை வளர்க்கவும், பிறமொழி ஆதிக்கத்தில் இருந்து காக்கவுவேதி.மு.க. தோன்றியது. தோன்றிய காலம் முதல், இன்றுவரை தமிழ் மொழிக்கானஒருதனிப்பெரும்பாதுகாப்பு இயக்கமாகவே செயல்பட்டு வருகிறது.

1938–ஆம் ஆண்டு முதல், இந்தி மொழித் திணிப்பு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நாமும்எதிர்த்துக்கொண்டே இருக்கிறோம். ஆதிக்கச்சக்திகளும் விடுவதாக இல்லை; நாமும்விடுவதாக இல்லை. இது வெறும் மொழிப் போராட்டம் மட்டுமல்ல; தமிழினத்தை, தமிழர் பண்பாட்டைக் காக்கும் போராட்டமாக நாம் தொடர்ந்து கொண்டு இருக்கிறோம்; தொடரவே செய்வோம் என்று இந்தப் பேரவையின் வாயிலாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு நான் உறுதி அளிக்கிறேன்.

இந்திய ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசானது, இந்தி மொழியைத் திணிப்பதை தனது வழக்கமாகவே வைத்துள்ளது. ஆட்சிநிர்வாகத்தில் இந்தியைத் திணிப்பது தொடங்கி, கல்வி மூலமாகத் திணிப்பதுவரை, தாங்கள்ஆட்சிக்குவந்ததன் நோக்கமே இந்தியைத் திணிப்பதுதான் என்று நினைக்கிறார்கள்.

ஒரே நாடு, ஒரே மதம், ஒரே தேர்தல், ஒரே தேர்வு, ஒரேஉணவு, ஒரேபண்பாடு என்ற வரிசையில் ஒரே மொழியை வைத்து, மற்ற தேசிய இன மக்களின் மொழிகளைஅழிக்கப்பார்க்கிறார்கள். இந்தியாஎன்பது, பன்முகத்தன்மைக்கொண்ட நாடு. பல்வேறு இனங்கள், மொழிகள், மதங்கள், பண்பாடுகள் கொண்ட மக்கள் வாழும் நாடு, இந்தியா. வேற்றுமையிலும்ஒற்றுமை கண்டு, சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வருகிறோம். விடுதலை பெற்ற இந்தியா, ஓராண்டுகூடஒற்றுமையாக இருக்காதுஎன்றுவெளிநாட்டுப் பத்திரிகைகள் எழுதிய நிலையில், நமது பன்முகத் தன்மையைக்காப்பதன்மூலமாகஇந்தியாஎழுபத்தைந்து ஆண்டுகளாகக்காப்பாற்றப்பட்டு வருகிறது.

பல்வேறு மொழியினர் வாழும் நாடு இது. ஆனாலும் மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டதால் அனைத்து மொழியினரும் மனநிறைவோடு வாழ்ந்து வருகிறார்கள். பல்வேறுமத நம்பிக்கையாளர்கள் இருந்தாலும், இந்தியா மதச்சார்பற்ற நாடாகவே அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு மொழி பேசுபவர்களின் நாடாக இருந்தாலும், ஒரு மொழியின் ஆதிக்கம் இருக்காதுஎன்பதை, இந்தியாவை ஆட்சி செய்த பிரதமர்கள் உறுதிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

மு.க.ஸ்டாலின்

இந்தி பேசாதமக்கள்மீது இந்தி மொழி திணிக்கப்படாது. அவர்கள் விரும்பும்வரை ஆங்கிலம் ஆட்சிமொழியாகநீடிக்கும் என்று பிரதமர் நேரு அளித்த உறுதிமொழிதான் இன்று வரை இந்தி பேசாத பெரும்பான்மை மக்களைக் காக்கும் அரணாக இருக்கிறது.

அனைத்துமாநிலங்களையும் உள்ளடக்கியதாக ஐந்தாண்டுத் திட்டங்களும், பொதுத்துறை நிறுவனங்களும்அமைக்கப்பட்டன. இப்படிநடந்ததால்தான், எல்லையால் மட்டுமல்ல; எண்ணங்களாலும் ஒற்றுமை கொண்ட நாடாக இந்திய நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. இதற்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான செயல்கள் அண்மைக்காலமாகநடந்து வருகின்றன. இதில்மிகமிக முக்கியமானது, இந்தி மொழித் திணிப்பு.

இந்திமொழித்திணிப்பை பட்டவர்த்தனமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்கிறது. இந்திமொழி தினம் கொண்டாடும் ஒன்றிய அரசு, மற்ற மாநில மொழிகளின் தினம் கொண்டாடுவது இல்லை. இந்தி மொழிக்குத் தரப்படும்முக்கியத்துவம்என்பது, மற்ற மொழிகளைப் புறக்கணிப்பதாக மட்டுமில்லை, அழிப்பதாகவும் அமைந்திருக்கிறது.

இந்தியை ஆட்சிமொழியாக, அலுவல் மொழியாக மட்டுமல்ல; அதிகாரம் செலுத்தும் மொழியாகவும் பா.ஜ.க. அரசு உயர்த்திக் கொண்டு இருக்கிறது. மேலாதிக்கம் செலுத்தும் மொழியாக அதனை மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தியும், ஆங்கிலமும் தான் அலுவல்மொழியாக இத்தனைகாலம் இருந்துவரும் நிலையில், ஆங்கிலத்தை மொத்தமாக அகற்றப் பார்க்கிறது பா.ஜ.க. அரசு.

இந்த வரிசையில் கடந்த 13–ஆம்நாளன்று, ஆங்கில ஊடகங்களில் சில செய்திகள் வெளியாகி உள்ளன. அவை நமக்கு பெரும் கவலை அளிப்பதாக உள்ளன. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் அமைக்கப்பட்ட அலுவல் மொழிக்கான நாடாளுமன்றக் குழுவின் அறிக்கையானது, குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருப்பதாக அச்செய்தி கூறுகிறது.

நாட்டில் உள்ள இந்தி பேசும் மாநிலங்களில், இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் (ஐ.ஐ.டி.), மத்திய பல்கலைக்கழகங்களில், கேந்திரிய வித்யாலயா கல்வி நிறுவனங்களில் பயிற்று மொழியாக இந்தி இருக்கவேண்டும் என்றும், போட்டித் தேர்வுகளில் கட்டாய ஆங்கில மொழி வினாத்தாள் நிறுத்தப்பட வேண்டும் என்றும், இந்தியில் பணிபுரியாத அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் எச்சரிக்கப்பட வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் பணியாளர்தேர்வில்தேர்வாளர்களின் இந்திமொழி அறிவை உறுதிசெய்ய வேண்டும்என்றும், ஒன்றிய அரசின் அலுவலகங்கள், அமைச்சகங்கள், கடிதங்கள் போன்றவை இந்திமொழியில் இருக்க வேண்டும் என்றும்பரிந்துரைசெய்துள்ளார்கள் என்று செய்திகள் மூலமாக தெரிய வருகிறது. முழுக்க முழுக்க இந்தியின் ஆதிக்கத்தை வலுப்படுத்தும் அறிக்கையாக இது அமைந்துள்ளது.

இந்தி பேசும் மாநிலங்களில் இந்தியை வலுப்படுத்தும் போர்வையில் இந்தியா முழுவதும் இந்தியைவலுப்படுத்தவே துடிக்கிறார்கள். கேந்திரியவித்யாலயாபள்ளி முதல் ஐ.ஐ.டி. வரை இந்தி மட்டும்தான்என்றால், மற்ற மொழி மக்களுக்கும் இந்தக் கல்வி நிறுவனங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தடுக்க நினைக்கிறார்கள்.

ஆங்கிலத்தை முற்றிலுமாக தடுப்பதன் மூலமாக, ஆங்கில அறிவையேமுற்றிலுமாகத்தடுக்கிறார்கள். மாநில மொழி என்று ஒப்புக்காகச் சொல்கிறார்களே தவிர, முழுக்க முழுக்க இந்திக்காகவே துடிக்கிறது அவர்களது இதயம்.

மாநில மொழிகள் மீது இவர்கள் இவ்வளவு பற்று வைத்திருப்பதுஉண்மையானால், அரசியலமைப்புச்சட்டத்தின்எட்டாவதுஅட்டவணையில் இடம்பெற்றுள்ள தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளையும், இந்திக்கு இணையான ஒன்றிய அரசின் அலுவல் மொழிகளாக அறிவிக்கத் தயாரா? என்று நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

அனைத்துத் தேர்வுகளிலும் கட்டாய ஆங்கில மொழிவினாத்தாள்இருப்பதைக்கைவிடச்சொல்வதன் மூலமாக, அனைத்து இந்தியத் தேர்வுகளையும் இந்தி மயமாக்கத் துடிக்கிறார்கள் என்பதே தெரிகிறது. இந்தி தெரியாதவர்கள்ஒன்றியஅரசுப் பணி பெறமுடியாத வகையில்இந்தப்பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன என்று கருதவேண்டி உள்ளது. இனிநடக்கும்அனைத்துத் தேர்வுகளும் இந்தியில் தான் என்று சொல்வதன் மூலமாக, இந்தி பேசும் மாநில மக்களுக்கு மட்டும் தான் இனி அனைத்திந்திய பணி இடங்கள் என்பதை வெளிப்படையாக அறிவித்துவிட்டார்கள்.

பணியாளர் தேர்வுகளுக்கு நடைபெறும் போட்டித் தேர்வுகளின் வினாத்தாள்களில் ஆங்கிலமொழியை அறவே நீக்கிவிட்டு, இந்திமொழியில் தான் வினாத்தாள் இருக்க வேண்டும் என்பதை சட்டபூர்வமாக்கவேண்டும்என்று பரிந்துரை செய்துள்ளோம் என்றுஇக்குழுவின்துணைத் தலைவரான பார்த்ருஹரி கூறியிருக்கிறார். இதுஎங்கே போய் முடியும் என்றால், இந்தி பேசாத மாநில மக்களை மொத்தமாக தேசிய நீரோட்டத்திலிருந்து அந்நியமாக்குவதில் போய்தான் முடியும். ஆங்கிலத்தை அகற்றுவதேஇந்தியைஅந்த இடத்தில் அமர்த்துவதற்காகத்தான்.

முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் தன்னிடம் சொன்னதாக தலைவர் கலைஞர் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுவார். “சட்டமன்றத்தில்ஆங்கிலத்துக்கு எதிராக சிலர் பேசியபோது,முதலமைச்சர் காமராசர்எங்களிடம்காதில் ரகசியம்போலச்சொன்னார். ‘ஆங்கிலத்தை எதிர்த்தீங்கன்னா, அந்த இடத்துல இந்திவந்துகுந்திக்கும்னேன்’ என்று சொன்னார்.

எவ்வளவு பெரிய அரசியல் பாடத்தை அவ்வளவு எளிமையாகக் காமராசர் சொன்னார் பார்த்தீர்களா?’’ என்று தலைவர் கலைஞர் குறிப்பிட்டுக்காட்டியிருக்கிறார். இன்றைக்கு ஆங்கிலத்தைஅகற்றுவதற்குப்பின்னால் இந்தியைக் கொண்டு வந்து உட்கார வைக்கும் மறைமுகத் திட்டம்தான் இருக்கிறது என்பதை இம்மாமன்றத்தில் அழுத்தம் திருத்தமாகநான் தெரிவிக்க விரும்புகிறேன்.

1968, 1976–ஆம் ஆண்டுகளில் அலுவல் மொழி தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், அதனடிப்படையிலானவிதிகளின்படி ஒன்றிய அரசுப்பணிகளில்ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது யப்பட்டுள்ளது. அத்தகைய ஆங்கிலத்தை அகற்றுவது எப்படிச்சரியாகஇருக்கமுடியும்? தற்போதைய நிலையில், அறிவியல் வளர்ச்சியையும் தொழில்நுட்ப வசதிகளையும் கவனத்தில் கொண்டு, எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்டஅனைத்துமொழிகளையும் இந்திக்கு இணையான அலுவல் மொழியாக்குவதே ஒன்றிய அரசின் நோக்கமாக இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, ஆங்கிலத்தையும் நீக்கிவிட்டு, இந்தியை மட்டும் வைப்பது அரசியல் சட்டத்தைமதிக்காததன்மையாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளுக்கும் சம வாய்ப்பு, சம உரிமை வழங்கி, அந்த மொழிகளை இந்திய நாட்டின் ஆட்சி மொழி மற்றும் அலுவல்மொழிகள்ஆக்கிட முயற்சிகள் எடுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு முழுக்க முழுக்க இந்திமயமாக்குவது சரியா? என்பது தான்நாம்எழுப்பும்கேள்வி!

தமிழ்நாட்டின் மொழிக் கொள்கைஎன்பது,தமிழும், ஆங்கிலமும்என்றஇருமொழிக்கொள்கை!தமிழ்மொழி இந்திய அரசின் ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஏற்கப்பட வேண்டும். மாநில ஆட்சி மொழிகள் அனைத்தும் இந்திய அரசின் ஆட்சிமொழியாக ஆக வேண்டும். இந்தி பேசாத மாநில மக்கள் மீது இந்தி மொழி எந்த வகையிலும்திணிக்கப்படக்கூடாது. இந்தி பேசாதமாநிலமக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடர வேண்டும். கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் இந்தி தெரிந்தவர்களுக்கு மட்டுமே சாதகமான வழிவகைகள்செய்யப்படக் கூடாது. அது நம் அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானதாக அமைந்துவிடும்.

தமிழகத்தில் இயங்கும் ஒன்றியஅரசின்அலுவலகங்களில் இணை அலுவல் மொழியாகதமிழை அங்கீகரித்து,அனைத்துஅலுவலகச் செயல்பாடுகளும் தமிழிலேயேஇயங்கஉரியசட்டத் திருத்தம்செய்யவேண்டும். சென்னை உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக தமிழை ஆக்க வேண்டும். இவைதான் நமது மொழிக் கொள்கை! இந்தித் திணிப்பைஎதிர்ப்பதும்,நீட் தேர்வு, புதியகல்விக்கொள்கையை நிராகரிப்பதும் இதனால்தான் என்பதை இந்த மாமன்றமும், தமிழ்நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள்.

இந்தி மொழி பயன்பாடு அடிப்படையில் இந்தியாவைஇவர்கள்மூன்றாகப் பிரிக்கப் பார்க்கிறார்கள். இந்தி மொழி பயன்பாடு அதிகம் உள்ள மாநிலங்கள், இந்தி மொழி பயன்பாடு குறைவான மாநிலங்கள், இந்தி பேசாத மாநிலங்கள் என்று மூன்றாக இந்தியாவைப் பிரிக்கிறார்கள். நாம் மூன்றாவதாக இருக்கிறோம். ஆனால், பெரும் மொழிமற்றும்பண்பாட்டிற்குச் சொந்தக்காரர்களாகிய நம்மை மூன்றாம்தரகுடிமக்களாக நம்மை ஆக்கிவிடப் பார்க்கும் முயற்சிகளுக்கு நாம் எதிர்க்குரல் எழுப்பிட வேண்டும்.

இந்திக்குத்தாய்ப்பாலும், இந்தியாவின்மற்றமொழிகளுக்குக் கள்ளிப் பாலும் புகட்டநினைப்பது, இந்திய அரசியல்சட்டத்திற்குஎதிரானது. இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்குப் பேராபத்தை விளைவிக்கக் கூடியது என்பதால் பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

பின்னர் தீர்மானத்தை அவர் வாசித்தார்.

சட்டசபையிலிருந்து வெளியேற்றப்பட்டதால் எதிர்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமியும், அவரது ஆதரவு எம்.எல்.ஏ.க்களும் கோஷம் எழுப்பிய போது எடுத்தபடம்.

தி.மு.க. ஆலோசனைப்படியே சபாநாயகர் செயல்படுகிறார்!

எடப்பாடி பழனிசாமி பேட்டி!!

சென்னை, அக்.18

தி.மு.க. ஆலோசனைப்படியேசபாநாயகர்செயல்படுகிறார் என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

சட்டசபையில் இன்று அமளியில் ஈடுபட்டதால் எடப்பாடி தரப்பு எம்.எல்.ஏ.க்களைவெளியேற்றுமாறு சபாநாயகர்உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

சட்டசபைக்கு வெளியே அ.தி.மு.க. இடைக்காலப் பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

உதயகுமாரை எதிர்க்கட்சித் துணைத் தலைவராகவும், அக்ரிகிருஷ்ணமூர்த்தியை துணைச் செயலாளராகவும் நியமனம்செய்ய வேண்டும் என்று கடிதம் கொடுத்துசுமார் இரண்டு மாதகாலமாகிறது.பின்னர்நினைவூட்டல் கடிதம் இரண்டு முறை சட்டப்பேரவைத்தலைவர்அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் நேற்றுவரைசரியானமுடிவு எடுக்கப்படவில்லை. நேற்று எங்களது கோரிக்கையை ஏற்காமல், ஏற்கெனவே துணைத் தலைவராக இருந்தவரே தொடர வேண்டும் என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். அவரை அந்த இருக்கையில் அமர வைத்துள்ளனர்.

நியாயமாக நடுநிலையோடுசெயல்படவேண்டிய சபாநாயகர், அரசியல் ரீதியாக செயல்படுவதை பார்க்கிறோம். தி.மு.க. தலைவர் ஆலோசனைப்படி சட்டசபைசபாநாயகர்செயல்படுகிறார். ஆர்.பி.உதயகுமார் மற்றும் அக்ரிகிருஷ்ணமூர்த்தியின் பதவிகளுக்காக முன்பே கடிதம் கொடுக்கப்பட்டது.

நாங்கள் வைத்த கோரிக்கைகளை சபாநாயகர் ஏற்கவில்லை. பொதுக்குழு தீர்மானம் மற்றும் நீதிமன்ற தீர்ப்பையே சபாநாயகர் மதிக்கவில்லை. சட்டமன்றம்என்பதுவேறு, கட்சிஎன்பது வேறு. அதிகமான எம்.எல்.ஏ.க்கள் யாரை சட்டமன்ற கட்சித் தலைவராக தேர்வு செய்கின்றனரோ அவர் முதல்வராக செயல்படுவார். ~~அதுதான்~~ நடைமுறை. அதேபோலத்தான் எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளுக்கும் தேர்வு செய்யப்படுவர். அதுதான் மரபு. அந்த மரபும், மாண்பும் இன்று சட்டப்பேரவையில்சட்டப்பேரவைத் தலைவர் மூலம் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் ரீதியாக அ.தி.மு.க.வைஎதிர்கொள்ளமுடியாத தி.மு.க. தலைவர் கொல்லைப்புறமாக,சட்டப்பேரவைத் தலைவர் மூலமாக எங்களை பழிவாங்கப் பார்க்கிறார். இது ஒருபோதும்நடக்காது.என்றைக்கும் நீதி, உண்மை, தர்மம்தான் வெல்லும்.

தி.மு.க.விற்கு ஆதரவாக எங்கள் கட்சியின் உயர் பொறுப்பாளரே செயல்படுகிறார்என்றுநான்ஏற்கனவே கூறியிருந்தது உண்மையாகிவிட்டது.

ஜெயலலிதா மரணம் தொடர்பாகவும்,தூத்துக்குடி துப்பாக்கிச்சூடுதொடர்பாகவும் விசாரணை ஆணையத்தை அமைத்தது நாங்கள் தான். நாங்கள் அமைத்த விசாரணைஆணையத்திற்கு அவர்களின் விளக்கம் தேவையில்லை.

தி.மு.க.அரசுமீதுமக்கள் கொதிப்பில்உள்ளனர். இந்த ஆட்சி எப்ப போகும் என பார்த்து கொண்டுள்ளனர். இதனை மறைக்கவே இந்திக்கு எதிராக தீர்மானம் கொண்டு வருகின்றனர். தி.மு.க.,பொதுக்குழுவில், தி.மு.க. தலைவர் பேசும் போது, ‘நான்கண்விழிக்கிறபோது எங்களது கட்சியில் இருந்து என்ன பிரச்சினை வருமோ என பயத்துடன் விழிக்கிறேன்’ எனக்கூறியுள்ளார்.

அது தான், அவர்களது ஆட்சி குறித்து அவர் கொடுத்தவாக்குமூலம்.அப்படி இருக்கையில் மக்களை அவர்கள் எப்படி காக்க முடியும்.நீங்கள்என்றைக்குஆட்சிக்கு வந்தீர்களோ அப்போதே மக்களுக்கு தூக்கம் போய் விட்டது.

விலைவாசி உயர்வு, சட்டம்ஒழுங்குசீர்குலைவுஉள்ளிட்டபிரச்சினைகளைசமாளிக்கமுடியாமல்ஸ்டாலின் தவிக்கிறார்.

நியாயமாக நடுநிலையோடு செயல்படும் சபாநாயகர் அரசியல் ரீதியாக செயல்படுவதை பார்க்கிறோம். தி.மு.க. தலைவர் ஆலோசனைப்படி சபாநாயகர் செயல்படுகிறார்.

அனைத்து திசைகளிலும் தி.மு.க.வுக்கு அடிமேல் அடிவிழுந்துவருகிறது.பேரவையில் குழப்பத்தை ஏற்படுத்தி.மு.க.முயற்சிக்கிறது. அ.தி.மு.க.வுக்கு ஒரு சட்டம். தி.மு.க.வுக்கு ஒரு சட்டமா?

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

சட்டசபையில்

எதிர்க்கட்சி தலைவர் பதவி மட்டுமே அங்கீகரிக்கப்பட்டது

துணைத்தலைவர் இல்லை என்றும் சபாநாயகர் அப்பாவு விளக்கம்!!

சென்னை, அக்.18

எதிர்க்கட்சி தலைவர் பதவி மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட பதவி என்றும், துணைத்தலைவர்உள்ளிட்ட பிற பதவிகள் கட்சிகளின் விருப்பத்திற்குஏற்பவேஉள்ளனஎன்றும்சபாநாயகர்அப்பாவு பேசினார்.

சட்டசபையில் இன்று சபாநாயகர்அப்பாவுபேசியதாவது:

தேர்ந்தெடுக்கப்பட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் சார்பில் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தரப்பில் எனக்கு ஒரு தபால் கொடுத்தனர்.

எதிர்க்கட்சி தலைவராக எடப்பாடி பழனிசாமியும், துணைத்தலைவராக ஓ.பன்னீர்செல்வம் மற்றும் பிற பதவிகளுக்கு சிலர் நியமிக்கப்பட்டு இருப்பதாகவும் கடிதம் கொடுத்திருந்தனர். சட்டசபை விதியைப் பொறுத்த அளவில் எதிர்க்கட்சி தலைவர் பதவி மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட பதவி. துணைத் தலைவர் மற்றும் பிற பதவிகள் கட்சியின் விருப்பத்திற்கு ஏற்பவேஉள்ளன.அந்தப்பதவிகளுக்கு அங்கீகாரம் கிடையாது.

பின்னர்எடப்பாடிதரப்பிலும், ஓ.பன்னீர்செல்வம் தரப்பில்இருந்தும்தற்போது எனக்கு கடிதங்கள் கொடுத்தனர். ஏற்கனவே இருவரும் இணைந்து கையெழுத்திட்டு கொடுத்த கடிதம் மட்டுமே செல்லுபடியாகும் என்றும், மற்ற கடிதங்கள் செல்லுபடியாகாது என்றும் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம்கடிதம்கொடுத்துள்ளார்.

அப்பாவு

தேர்தல் ஆணைய பதிவேட்டில்ஒருங்கிணைப்பாளர் என்றே தனது பெயர் இருக்கிறது என்றும் ஓ.பன்னீர்செல்வம் சொல்லியிருக்கிறார். அவர்கள் இருவரும் கொடுத்த கடிதங்கள் எனது ஆய்வில்இருந்துவருகிறது. இந்த இடத்தில் இவரை அமரவைக்கக்கூடாது எனக் குறிப்பிடயாருக்கும்உரிமை கிடையாது. கடைசி நேரத்தில்வந்துஇருக்கையைமாற்றச்சொன்னால் எடுத்தேன், கவிழ்த்தேன் என முடிவெடுக்க முடியாது.

சபையில் இருக்கைகள் ஒதுக்குவது எனது முடிவு. அதில்யாரும்தலையிடமுடியாது. தனக்கான இருக்கையை மாற்றித்தர வேண்டும் என்று எம்.எல்.ஏ.க்கள் கேட்பதற்கு உரிமை உள்ளது. ஆனால் வேறு ஒருவருக்கான இடத்தைமாற்றுங்கள் என்று சொல்ல உறுதி செய்யாருக்கும் உரிமை கிடையாது.கடந்தஆட்சியில்சக்கரபாணி வந்து கலைஞருடைய3சக்கரநாற்காலிவந்து செல்ல வசதியாக இருக்கையை மாற்றித்தாருங்கள் என்று கேட்டபோது அவர்கள் மறுத்துவிட்டார்கள். அதற்காகநானும்அதைமனதில் வைத்து .செய்ய மாட்டேன்.

கலைஞர் ஆட்சியில் பட்ஜெட் உரை வாசிக்கப்பட்ட போது அதை கிழித்து எறிந்தீர்கள்.. ஜானகி அம்மாள் ஆட்சிக்காலத்தில் கலகம் விளைவித்தீர்கள். அந்த மாதிரி நிகழ்வு மீண்டும் நடக்க விடமாட்டேன். நீங்கள் பேசிய எதுவும் இந்த சபைக்குறிப்பில் இடம்பெறாது.இந்தி எதிர்ப்பு தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றப்பட உள்ளது என்பதை தெரிந்துகொண்டு யாருக்கோபயந்துஇவ்வாறு செயல்படுகிறீர்கள். மக்கள் தரப்பு பிரச்சினையை பேச மறுக்கிறீர்கள்.நீங்கள்திட்டமிட்டேகலகம்விளைவிக்க வந்திருக்கிறீர்கள்.

ஜெயலலிதா மரணம் குறித்த அறிக்கை இங்கே தாக்கல் செய்யப்பட உள்ளது.தூத்துக்குடியில்7கிலோமீட்டர் தூரம் அமைதியாக நடந்து சென்றவர்களை குருவியை சுடுவது போல் சுட்டுக்கொன்றீர்களே. அது தொடர்பான அறிக்கையும் இங்கேதாக்கல்செய்யப்படுகிறது.இவ்வாறுசபாநாயகர் அப்பாவு பேசினார்.

சார்பு நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம், பூவிருந்தவல்லி
MCOP NO. 35/2022
S.கிஷோர் குமார்
Vs
மனுதாரர்
1.A.விக்னேஷ்வரன்
2. மக்மா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
எதிர் மனுதாரர்கள்
பெறுநர்:
A.விக்னேஷ்வரன்
No.10,தனம்மாள் தெரு, பராசக்தி நகர், திருவேற்காடு, திருவள்ளூர் -600077.
...முதல் எதிர் மனுதாரர்
மேற்கண்டமுதல்எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-12-AL-9646என்ற வாகனம் 18.12.2021 அன்று மனுதாரர்மீது மோதியதில்படுகாயம் அடைந்த மனுதாரர் இழப்பீடு கோரி மேற்கண்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட வழக்கு 10.11.2022அன்று மேற்கண்டநீதிமன்றத்தில் அழைக்கப்படும், அன்றையதினம்காலை10.30மணி அளவில் தாங்களோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ கோர்ட்டில்ஆஜராகவும்.தவறும்பட்சத்தில்இவ்வழக்குதங்களுக்குஎதிராக ஒருதலைப் பட்சமாக தீர்வு காணப்படும் என்பதை அறியவும்.
N.Radhika
மனுதாரரின் வழக்கறிஞர்

சார்பு நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம், பூவிருந்தவல்லி
MCOP No. 369/2019
அமுல்
...மனுதாரர்
Vs
1. M.Zaibunnisha
2. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
...எதிர் மனுதாரர்கள்
பெறுநர்:
M.Zaibunnisha,
No. 6, இந்திரா நகர், மாங்காடு, சென்னை - 600 128.
...முதல் எதிர் மனுதாரர்
மேற்கண்டமுதல்எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-22-BP-1857என்ற வாகனம் 14.01.2019 அன்று மனுதாரர்மீது மோதியதில்படுகாயம் அடைந்த மனுதாரர் இழப்பீடு கோரி மேற்கண்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட வழக்கு 15.12.2022அன்று மேற்கண்டநீதிமன்றத்தில் அழைக்கப்படும். அன்றையதினம்காலை10.30மணி அளவில் தாங்களோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ கோர்ட்டில்ஆஜராகவும்,தவறும்பட்சத்தில்இவ்வழக்குதங்களுக்குஎதிராக ஒருதலைப் பட்சமாக தீர்வு காணப்படும் என்பதை அறியவும்.
N.Radhika
மனுதாரரின் வழக்கறிஞர்

தமிழ்நாடு அரசு
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 06/வபி/கோ.114ரூ/2022 நாள். 17.10.2022
மொத்தவகை (விலை அடிப்படை ஒப்பந்தமுறை) (இரு உறை முறை)

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் தலைமை பொறியாளர், மீன்பிடித்துறைமுக திட்ட வட்டம், ஒருங்கிணைந்த அலுவலக வளாகம், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, நந்தனம், சென்னை– 35 அவர்களால் கீழ்காணும் பணிகளுக்கு தகுதி வாய்ந்த தமிழ்நாடு அரசுத்துறையில் பதிவு செய்த சிவில் ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்	வேலையின் பெயர்	பணியின் தோராய மதிப்பு இயட்சங்களில்	முன் வைப்புத் தொகை	வேலை முடிக்க வேண்டிய காலம்	தகுதி உள்ள ஒப்பந்த தாரர்கள்	ஒப்பந்தப்புள்ளி விலை மற்றும் பொருள்கள் சேவை வரி	முன் வைப்புத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி விலை வாரு வைக்க வேண்டிய அலுவலரின் பெயர்.
1.	கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டினம் மீன்பிடிதுறைமுகத்தில் பிரதான அலை தடுப்புச் சுவரினை நீட்டிக்கும் பணி(புகுதி–III)	ரூ. 9652.00	ரூ. 48,36,000/-	24 மாதங்கள்	வகுப்பு-I மாநில அளவில் ரூ.75.00 இலட்சத்திற்கு மேல்	ரூ.15000 + 1800/-	செயற் பொறியாளர், மீ